சுருக்கம்

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திருமதி கி.கல்யாண சுந்தரி, க/பெ. (அமரர்) திரு.த.ஏகாம்பரம், தட்டச்சர், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் சுகாதாரப் பகுதி மாவட்டம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண்.112

நாள் 30.05.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, வைகாசி – 16

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 03.08.1977.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.22187/ப.தொ.4/இரு.3/2016, நாள்.15.06.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

*****

ஆணை:

திரு.த.ஏகாம்பரம் என்பவர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில், தஞ்சாவூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், தொண்டராம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதார ஆய்வாளர் நிலை–2 ஆக பணியாற்றி வரும்போது 26.05.2013 அன்று காலமானார். மறைந்த அரசு ஊழியரின் மன்னவி திருமதி கி.கல்யாண சுந்தரி என்பவர், அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977–இல் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ததன் பேரில், கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 11.08.2017 அன்று முற்பகல் தஞ்சாவூர் சுகாதாரப் பகுதி மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் இணைந்தார் எனத் தெரிவித்துள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், தனியரின் பணியினை, அவர் வகிக்கும் தற்காலிக தட்டச்சர் பதவியில் பணியில் இணைந்த நாளான 11.08.2017 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்துதல்களின்படி தனியரின் அனைத்து சான்றிதழ்களையும் ஆய்வு செய்த பின், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி கி.கல்யாண சுந்தரி என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான 11.08.2017 அன்று முற்பகல் முதல்

தட்டச்சர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியாின் பணியினை முன்னாளிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.8242/க்யூ1/2019–1, நாள் 24.05.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.7969/ஜி2/2019, நாள் 10.04.2019 ஆகியவற்றின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை 600 006.
தனியர் (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்,
சென்னை – 600 006. வழியாக)
மாநில கணக்காயர், சென்னை 600 018 / 600 035.
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.
<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

31/5/19
பிரிவு அலுவலர்
V.S
31.5.19